## அபிவிருத்தி லொத்தர் சபை - 2015

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம், சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கைகளில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அபிவிருத்தி லொத்தர் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01**

(i) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றை தவிர, சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்றிற்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், சபையினால் வங்கி மேலதிகப்பற்றாக உறுதிப்படுத்தப்படாத ரூபா 201,187,108 தொகையான செலவு மீதி வங்கி மீதியுடன் ஈடுசெய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 934,026,234 பெறுமதியான வெகுமதி ஒதுக்கக் கணக்கின் தன்மை மற்றும் அதன் நோக்கம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான நிதி ஏற்பாடு ரூபா 8,161,089 மற்றும் ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடைப் படிகள் ரூபா 807,934 தொகை என்பன தனித்தனியாக இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பதற்குப் பதிலாக அது ஈடுசெய்யப்பட்டு ஆண்டின் பணிக்கொடை ஏற்பாடாக ரூபா 7,353,155 காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது தொழிற்படு மூலதன அசைவுகளைச் சீராக்கும் போது ரூபா 31,748,430 தொகை நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் அசைவுகளும் சீராக்கப்பட்டிருந்தது.

**(இ)  இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08**

2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை வருமான வரி செலுத்தாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட நிலுவை வரிக் கடப்பாடுகள் ரூபா 1,557,163,004 தொகை முன்னோக்கிய ரீதியில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டின் போது ரூபா 1,132,035,053 தொகையான சபையின் உரித்துக்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 519,726,031 மறைப்பெறுமதியொன்று வரை காண்பிக்கப்பட்டு அசாதாரணமாக மாற்றமடைந்திருந்தது.

**(ஈ)  இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டிற்குரிய வருமான வரிக்காக சபையினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 606,195,948 தொகை விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்படாமல் சனாதிபதி நிதியத்தில் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 18(3) ஆம் பிரிவு | புதிதாக நடாத்தப்படும் அபிவிருத்தி லொத்தர் பரிசுகளை வழங்குவதற்காக பணம் போதியளவில் காணப்படாத போது மாத்திரம் வெகுமதி ஒதுக்கக் கணக்கின் மீதி பயன்படுத்த முடியுமான போதிலும் அதற்கு முரணாக சபையின் அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்தை கைப்பற்றுவதற்காக வெகுமதி ஒதுக்கக் கணக்கிலிருந்து ரூபா 405,000,000 தொகையொன்றை பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 19(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் லொத்தர் சம்பந்தமான விதிகளைத் தயாரித்து விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்காமல் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சுரண்டும் லொத்தர் மற்றும் சீட்டிழுப்பில் வெற்றியாளர்களைத் தெரிவு செய்யும் லொத்தர் |

| | | |
|---|---|---|
| | | மூலம் ரூபா 10,119,457,760 விற்பனை வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 6,150,951,795 தொகை பரிசுக்காக ஒதுக்கப்பட்டு ரூபா 2,146,551,646 தொகை விற்பனை முகவர்களுக்கு தரகினை வழங்குவதற்கும் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2014 திசெம்பர் 09 ஆந் திகதிய எம்எப்2/டீஎல்பீ/ஜீஈஎன்/வீஓஎல்/I ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் கடிதம் | அரசாங்கத்தின் ஆதனக் கடன் தொடர்பான ஏற்பாடுகளுக்கு முரணாக 14 ஊழியர்களினால் பெறப்பட்ட ரூபா 9,125,000 கூட்டுத்தொகையான தனியார் வங்கிக் கடன், ஆதனக் கடனாகக் கருதி சபையினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 160,527 மற்றும் ரூபா 402,772 தொகையான வட்டி வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| | (i) 9.3.1(அ) வழிகாட்டி | சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் நியாயமான தன்மை தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியுமாயின் மாத்திரம் உற்பத்தியாளர்களிடமிருந்தோ அல்லது முகவர் நிறுவனங்களிலிருந்தோ பழுதுபார்த்தல்களை மேற்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் வாகன பழுதுபார்த்தல்களுக்காக 07 சந்தர்ப்பங்களின் போது முகவரிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளை மாத்திரம் கவனத்திற்கொண்டு ரூபா 1,321,914 தொகையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | (ii) 9.3.1 (ஆ) வழிகாட்டி | மோட்டார் வாகனத்தைப் பழுதுபார்க்கும் போது ரூபா 200,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 853,907 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்கோவை மற்றும் 2005 சனவரி 31 ஆந் திகதிய பீஈடீ/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2015 நவம்பர் 12 ஆந் திகதிய பீஈ/எல்ஓ/டீஎல்பீ/ஜீஈஎன்/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் | கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாகவும் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமலும் பெறப்படாமலும் மாதமொன்றிற்கு ரூபா 198,000 வீதம் செலுத்துவதற்கு வாடகை வாகனமொன்று பெறப்பட்டிருந்தது. |

நாயகத்தின் கடிதம்

| | | |
|---|---|---|
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 மற்றும் 9.12 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் போது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் ஊழியர்களுக்காக ரூபா 12,468,593 தொகையான வைத்திய உதவிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பெறுமதியில் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்குரிய அடிப்படை ஆவணங்கள் இன்றி ரூபா 9,713,405 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும், பாதிடப்பட்ட நிதி ஏற்பாட்டின்றியும் சபையின் 06 உதவி பொது முகாமையாளர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டு ரூபா 969,890 தொகையான எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் சாரதிகளின் சம்பளம் மற்றும் மேலதிக நேரம் படியாக ரூபா 2,664,340 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ 57 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் விளம்பர மற்றும் மேம்படுத்தல் செலவினத்திற்காக ரூபா 180,746,018 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த விளம்பர நிகழ்ச்சித்திட்டங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2003 யூலை 24 ஆந் திகதிய 02 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளை விஞ்சி சிலிண்டர் கொள்ளளவு 2690 கொண்ட வாகனமொன்று வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2002 ஒக்தோபர் 11 ஆந் திகதிய எம்டீபீஜ/எம்பீஆர்டீ/வீஈஎன் ஆம் இலக்க கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சின் சுற்றறிக்கை | வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது சாரதி மற்றும் எரிபொருள், சபையினால் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றின் போது காப்புறுதிச் சேவை மற்றும் பழுதுபார்த்தல்கள் என்பன வாகன வழங்குனரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக அச்செலவினம் சபையினால் செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

--------------------

### 3.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 2,333,259,687 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,353,246,338 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 19,986,651 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டின்

செலவினம் ரூபா 491,581,670 இனால் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் ரூபா 511,568,321 இனால் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மிகை வீழ்ச்சியடைந்திருந்தது. ஊழியர் வேதனங்கள், நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வட்டிக்கான சீராக்கங்களின் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2,056,854,697 தொகையான பங்களிப்பு 2014 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 3,853,950,488 ஆக இருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் சபையின் இலாபத் தன்மை மற்றும் தொழிற்படு மூலதன விகிதம் தொடர்பான பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| (i) | மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 43 | 44 |
| (ii) | தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 19 | 19 |
| (iii) | நடைமுறை விகிதம் | 1:1.6 | 1:1.5 |
| (iv) | விரைவு விகிதம் | 1:1.5 | 1:1.5 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 396,817,887 இனால் அதாவது 3.2 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் ரூபா 124,516,322 இனால் அதாவது 1.8 சதவீதத்தினால் குறைவடைந்தமை மொத்த இலாப விகிதிம் மாற்றமின்றி காணப்பட்டமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) ஏனைய வருமானம் ரூபா 92,519,356 இனாலும் வெல்லப்படாத பரிசுகளை மீளக் கையேற்றல் ரூபா 22,231,080 இனாலும் குறைவடைந்த போதிலும்,லொத்தர் விநியோகச் செலவினம் அதற்கு நேரொத்ததாக ரூபா 93,853,621 இனால் குறைவடைந்தமை தேறிய இலாபத்தை நிலையானதாக பேணிச் செல்வதற்கு காரணமாக இருந்தது.

(இ) சபையின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சி நடைமுறைப் பொறுப்புக்கள் காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் போதும் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3.3 சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

நிறுவனத்தினால் வெளிநபரொருவரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,520,000 தொகையினை அறவிடுவதற்காக வழக்கொன்று தொடரப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் நோக்கங்கள் பின்வருமாறாகும்.**

(i) சனாதிபதி நிதியத்திற்கு நிதியினை உள்ளீர்கும் பணிகளுக்காக சீட்டிழுப்புக்களை நடாத்துதல் மற்றும் அதற்காக நடவடிக்கை எடுத்தல்.

(ii) அவ்வாறு கிடைக்கின்ற நிதியை சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பிவைத்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மீளாய்வாண்டின் போது 8 லொத்தர் சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டு ரூபா 1,727 மில்லியன் ஈட்டப்பட்டு அதில் ரூபா 1,628 மில்லியன் சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) லொத்தர் சீட்டுக்களின் விற்பனையையும் விளம்பரக் கிரயத்தையும் ஒப்பிடல்**

| லொத்தர் சீட்டின் பெயர் | விற்பனை வருமானம் | | | | விளம்பரக் கிரயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | முரண்கள் | சதவீதம் | 2014 | 2015 | முரண்கள் | சதவீதம் |
| | ரூபா | ரூபா | ரூபா | % | ரூபா | ரூபா | ரூபா | % |
| சனிதா வாசனாவ/ அபிவிருத்தி | 2,007,008,025 | 2,096,216,100 | 89,208,075 | 4.44 | 7,791,985 | 26,927,823 | 19,135,838 | 245.58 |
| லக்ன வாசனாவ | 2,492,645,100 | 2,424,568,575 | (68,076,525) | (2.73) | 27,736,856 | 30,233,422 | 2,496,566 | 9.00 |
| ஜயோதா | 1,255,317,525 | 1,174,951,800 | (80,365,725) | (6.40) | 26,562,805 | 24,484,608 | (2,078,197) | (7.82) |
| ஜனஜய/ கெலெக்ஸி ஸ்டார் | 854,071,350 | 906,953,850 | 52,882,500 | 6.19 | 10,795,645 | 27,748,445 | (16,952,800) | 157.03 |
| நியத ஜய | 1,025,266,275 | 970,588,575 | (54,677,700) | (5.33) | 24,502,245 | 26,113,147 | 1,610,902 | 6.57 |
| சுபர் போல் | 2,314,937,625 | 2,082,186,975 | (232,750,650) | (10.05) | 39,286,399 | 30,310,818 | (8,975,581) | (22.85) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சனிதா வாசனா மற்றும் ஜனஜய/ கெலெக்ஸி ஸ்டார் போன்ற லொத்தர் சீட்டுக்களின் விளம்பரக் கிரயத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 246 சதவீதத்தினாலும், 157 சதவீதத்தினாலும் அதிகரிப்பதற்கு ஒப்பாக விற்பனை வருமானம் 4 சதவீதம் மற்றும் 6 சதவீதம் என்ற குறைந்த சதவீதத்திலேயே அதிகரித்திருந்தது.

(ii) நியத ஜய லொத்தரின் விளம்பரக் கிரயத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 6.57 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை வருமானத்தில் 5.33 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

(iii) சுபர் போல் லொத்தரின் விற்பனை வருமானத்தை முன்னை ஆண்டுடன் ஒப்பிடும் போது 10.05 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) அபிவிருத்தி/ லக்ன வாசனா லொத்தரின் விளம்பரக் கிரயத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 9 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை வருமானத்தில் 2.73 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளின் போது வரி செலுத்தாது புறக்கணித்தமையினால் ஏற்பட்ட நிலுவை வரித்தொகையைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 131,270,475 தொகையான நிலையான வைப்புக்களின் முதலீடு இரத்துச் செய்யப்பட்டு பணம் மீளப்பெற்றமையினால் கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் ரூபா 4,815,246 தொகையை சபை இழந்திருந்தது.

(ஆ) விற்பனையை மேம்படுத்துவதற்காக கடன் அடிப்படையில் லொத்தர் சீட்டுக்களை வழங்கும் போது கொள்வனவு செய்யப்படுகின்ற 25 லொத்தர் சீட்டுக்களுக்கு ஒன்று வீதம் இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு லொத்தர் சீட்டுக்களுக்காக 13 சீட்டிழுப்பு தடவைகளுக்குரியதாக இந்த மேம்படுத்தல் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னருள்ள நிலைமை மற்றும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னரான நிலையுடன் ஒப்பிடும் போது 42,227 லொத்தர் சீட்டுப் புத்தகங்களின் விற்பனையில் குறைவு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலவசமாக விநியோகிக்கப்பட்ட 130 லொத்தர் சீட்டுப் புத்தகங்களின் பெறுமதியான ரூபா 107,250 தொகை பயனற்ற செலவினமாக இருந்ததா என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(இ) லொத்தர் சீட்டிழுப்புத் தகவல் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாமல் 2009 ஆம் ஆண்டின் போது வழங்குனரொருவர் தெரிவு செய்யப்பட்டு 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அத்திகதி முதல் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை இரண்டு நீடிப்புக்கள் வழங்கப்பட்டு உரிய கம்பனிக்கு ரூபா 81,997,776 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2016 யூலை 13 ஆந் திகதி வரையிலும் தகவல் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

--------------------------------------

சபையினால் வாரந்தோறும் சீட்டிழுக்கப்படுகின்ற ரூபா 862,918,650 பெறுமதியான 52,298,100 லொத்தர் சீட்டுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2016 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் பிணை/ காப்பீடு பெறப்படாமல் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெலெக்ஸி ஸ்டார் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை மேம்படுத்தலுக்காக கெலெக்ஸ் ஸ்டார் இலட்சிணையுடன் 700 குடைகளைப் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 308,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், குடை வழங்குனரிடமிருந்து வியாபார இலட்சிணையுடன் குடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டமையால் அந்தக்

கொடுக்கல்கள் மூலம் சபையின் எதிர்பார்த்த இலக்கு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஏப்ரல் 22 ஆந் திகதி சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,095,000 பெறுமதியான டபள்கெப் வாகனம் முன்னாள் தலைவரினால் வழங்குனர் கம்பனியிலிருந்து கையேற்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த வாகனம் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் கணக்காய்வின் போது அதன் பௌதீக இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது. எவ்வாறாயினும் இந்த மோட்டார் வாகனம் சபையின் சொத்தொன்றாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பொறுப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் பொறுப்பொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபையினால் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 38,752,448 தொகை செலவில் லொத்தர் சீட்டிழுப்பை ஒலிப்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளுக்காக கலையரங்கமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கலையரங்கம் உரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கலையரங்கத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக ஆய்வு செய்து ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 2012 யூன் மாதத்தின் போது வழங்கப்பட்ட சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கலையரங்கம் பயன்படுத்தப்படாமல் லொத்தர் சீட்டிழுப்புக்கள் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 36,850,000 தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் சபையின் கலையரங்கம் சபையின் விரிவுரை மண்டபமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டம்

முறையான பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையும், குறித்த காலப்பகுதியில் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை போன்ற காரணங்களினால் அச்சிடல் நடவடிக்கைகளிலிருந்து சபைக்கு ரூபா 6,093,297 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒன்றிணைந்த தகவல் முறைமையொன்றை ஏற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 3,472,393 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந்த செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டமையினால் இந்த செலவினம் பயனற்ற செலவினமொன்றாகியிருந்தது.

### 4.8 பதவியணியினர் நிருவாகம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 221 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவிணயினர் 238 ஆக இருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்கள் 19 ஆகக் காணப்பட்டதுடன் மிகைகளின் எண்ணிக்கை 36 ஆகும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பணிப்பாளர் சபை அங்கீகரித்த செயலாற்றல் அறிக்கை அல்லது செயல்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை சபை அடைந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக முறையான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 10 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 சுற்றாடல் மற்றும் சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

அபிவிருத்தி லொத்தர் பரிசு பெறுவோர்களிடமிருந்து ஒவ்வொரு வருடமும் பரிசுப் பெறுமதியில் 4 சதவீதத்திற்கு அண்ணளவான எண்ணிக்கையில் உரித்தைக் கோருவதற்கு முன்வராதிருந்தமையும் கடந்த 5 ஆண்டுகளில் அவ்வாறு உரித்து கோரப்படாத பெறுமதி ரூபா 1,103,636,625 எனவும் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் 07 மாதங்களில் உரித்துகோரப்படாத லொத்தர் சீட்டுக்களுக்கிடையே ரூபா 50,000 முதல் ரூபா 1,000,000 வரையிலான 49 லொத்தர்கள் காணப்பட்டது. வெற்றியாளர்களுக்கு உரிய வெற்றியினை வழங்குவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் சபையின் நன்மதிப்பை உயர்நிலையில் கொண்டுவருவதற்கும் முடியுமான வகையில் பரிசுகளுக்காக உரித்து/ கோரப்படாதுள்ளமையை இழிவுபடுத்துவதற்காக எந்தவொரு வேலைத்திட்டத்தையும் அமுல்படுத்துவது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சபையின் வரி, செலுத்த வேண்டிய பரிசுகளை இறுதிக் கணக்குகளில் இனங்காணப்படாமை மற்றும் வெளிப்படுத்தாமை மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றைப் பேணாமை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக கவனத்திற்கொள்ளக்கூடிய பதவியணியினர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சபையின் கலையரங்கம் தொடர்பாக இழப்பீட்டுப் பரிசோதனை மேற்கொள்ளும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாமை. |
| (ஈ) | களஞ்சியக் கட்டுப்பாடு | களஞ்சியப் பதிவேடு உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை. |